சார்பு நீதிமன்றம், திருமயம்.
முன்னிலை – திரு. G.அருண்குமார், B.Sc., B.L.,
கூடுதல் சார்பு நீதிபதி, புதுக்கோட்டை,
சார்பு நீதிமன்றம் திருமயம்(மு.கூ.பொ).
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் தேதி புதன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 4 ஆம் நாள்)

**அசல் வழக்கு எண். 485/2023**

**CNR.No.TNPD19001499–2023**

1. கருப்பாயி
2. மீனாள்
3. லெட்சுமி
4. சீத்தா ...வாதிகள்

/எதிர்/

1. முத்து
2. கிட்டு
3. கேசவன்
4. லெட்சுமி .....பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பு 06.03.2026–ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். ஆசைத்தம்பி அவர்கள் மூலம் முன்னிலையாகி பின்னிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், 4ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சோலை. முத்தையா அவர்கள் மூலம் முன்னிலையாகி பின்னிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், 2ம் பிரதிவாதி தரப்பில் வக்காலத்து தாக்கல் செய்யாத காரணத்தினாலும, நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினாலும், ஒருதலைபட்சநிலைக்கு உட்படுத்தப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

தாவாச்சொத்துக்களில் வாதிகளுக்கு தலா 1/7 பாக பாத்தியம் உள்ளது என கண்டு வாதிகளின் தனித்த அனுபவத்திற்கு கிடைக்கும்படி நயஇளப்பம் சரிகட்டி தர முதல்நிலைதீர்ப்பாணை பிறப்பித்தும், அதனை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்ககோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) வழக்குரையின் சுருக்கம்:

(i) வாதிகளும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் சகோதரிகள் ஆவார்கள். தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் பெற்றோர்களான காசி சேர்வை, வீரம்மாள் தம்பதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி காசி சேர்வைக்கு பெரிச்சு குட்டி சேர்வை என பெயர் உண்டு. தாவாச் சொத்துக்களில் 2 முதல் 21 அயிட்ட சொத்துக்கள் காசி சேர்வைக்கு கிரைய வழியில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். ஏனைய சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் ஆகும். கடந்த 11.04.2007 ஆம் தேதி காசி சேர்வை வழக்கு சொத்துக்களை பொறுத்து எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்தி வைக்காமல் இறந்து விட்டதாகவும், காசி சேர்வைக்கு முன்பாகவே அவரது மனைவி வீரம்மாள் இறந்து விட்டார். வாரிசு அடிப்படையில் வழக்குச் சொத்துக்களை வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் அடைந்து பொது அனுபவம் செய்து வருவதாகவும், 4–ம் பிரதிவாதி 2–ம் பிரதிவாதியிடம் தாவா 1–ம் அயிட்டச் சொத்தை கிரயம் பெற்றுள்ளதாகவும், தன் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளதாகவும், 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் தாவா 1–வது அயிட்ட சொத்தை கிரையம் பெற்றுள்ளதாக கூறியதாகவும், 1வது அயிட்டச் சொத்தில் வாதிகளுக்கு பாகம் இருப்பதை மறைத்து வாதிகளை ஏமாற்றும் நோக்கத்தில் 4–ம் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ளது செல்லாது. வாதிகளுக்கு வழக்கு சொத்தில் பாகம் உள்ளது.

(ii) வாதிகள், பிரதிவாதிகளுக்கு 10.10.2020 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி 4–ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை ரத்து செய்து தங்களுக்குரிய பங்கு பாக விகிதத்துடன், பாகப்பிரிவினை செய்து தர வேண்டும் என கூறிய பின்பும் பிரதிவாதிகள் அறிவிப்பினை பெற்றுக்கொண்டு உடன்படவில்லை. எனவே, அசல் வழக்கு பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கில் 2–ம் வாதி மீனாள் வா.சா.1 ஆக விசாரணை செய்து, வா.சா.ஆ. 1 முதல் 5 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவனங்கள் முன்வைக்கப்படவில்லை.

<u>தீர்வு.</u>

(i) அசல் வழக்கு சொத்துக்கள் பனங்குடி வட்டம். பனங்குடி கிராமத்தில் பட்டா எண் 792 மற்றும் பட்டா எண் 14/51 இல் அமைந்துள்ளது. வழக்கு முதல் அயிட்டச் சொத்தினை பொறுத்து நீக்கம் செய்து கொள்வதாக வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையின் அடிப்படையில் கடந்த 21.9.2021 ஆம் தேதி முதல் அயிட்டச் சொத்து நீக்கரவு செய்யப்பட்டுள்ளது.

(ii) இந்த வழக்கில் பிரதிவாதிகள் அனைவரும் முன்னிலையாகாமல் அவர்கள் மீது ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் ஆவணங்கள் 1 முதல் 5 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பெரிச்சகுட்டி சேர்வை மற்றும் காசி சேர்வை இருவரும் ஒரே நபர் என சங்கதி முன்வைத்துள்ளார்கள். மேற்படி நபர்கள் இருவரும் வெவ்வேறானவர்கள் என்பதற்கு சங்கதி முன்வைக்கவில்லை. 4–ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ள கிரைய ஆவணம், நகல் என்பதால் குறியீடு செய்யப்படாமல் வழக்கு கோப்பில் உள்ளது. மேற்படி ஆவணம் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம். அதன் சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி ஆவணத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தந்தை பெயர் காசி சேர்வை என்ற பெரிச்சி குட்டி சேர்வை என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பிரதிவாதிகள் மறுக்காத போது அதனைக் குறித்து தீர்மானிக்க வேண்டியது இல்லை.

(iii) வழக்கு 1 முதல் 21 அயிட்டச் சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தந்தைக்கு பாத்தியப்பட்டச் சொத்துக்கள் என்பதற்கு அவரது பெயரில் உள்ள பட்டாக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் 2 முதல் 22 அயிட்டச் சொத்துக்களில் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக முன் வைத்துள்ள சங்கதிகளையும், பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. எனவே, வாதிகள் வழக்கில் முன் வைத்துள்ள சங்கதிகளை தகுந்த சாட்சியம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் நிரூபணம் செய்துள்ளார்கள் என முடிவு செய்யப்படுகிறது.

இறுதியாக, வாதிகளின் வழக்கு செலவு தொகை இன்றி அனுமதிக்கப்பட்டு, வழக்கு 1 முதல் 22 அயிட்ட சொத்துக்களில் வாதிகளுக்கு தலா 1 /7 பாகம் உள்ளது என முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18–ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- G.அருண்குமார்,

சார்பு நீதிபதி,
திருமயம் (மு.கூ.பொ).

<u>வாதி தரப்பு சாட்சி</u>:

வா.சா.1 – செல்வி. மீனாள்

<u>வாதி தரப்பு சான்றாவணம்</u>:

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.10.2020 ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.2 | அறிவிப்பை 1, 3 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | அறிவிப்பை 2–ம் பிரதிவாதி பெற்றுக் கொள்ளாமல் திரும்பி வந்த கவர் | அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.4 | பட்டா எண்,762 க்கான 10(1)சிட்டா | நகல் |
| வா.சா.ஆ.5 | பட்டா எண்.1451 க்கான 10(1) சிட்டா | நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, மற்றும் சான்றாவணம்</u> – இல்லை.

ஒம்/- G.அருண்குமார்,
சார்பு நீதிபதி,
திருமயம் (மு.கூ.பொ).